JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **554/2019** |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | வரதராஜ் | Village | விஜயமங்கலம் |
| Father's Name | பழனிச்சாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 18.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். தேதி ஞாபகம் இல்லை. சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக மாலை 6 – 7.00 மணி சுமாருக்கு பெருந்துறை பேருந்து நிலையத்தில் நான் இருந்த போது அரசு பேருந்தில் இருந்து இறங்கிய நபர் மீது பின் நோக்கி வந்த பேருந்தின் பின்சக்கரம் பேருந்தை விட்டு இறங்கிய நபரின் காலில் ஏறியதில் காலில் இரத்த காயம் ஏற்பட்டு விட்டடது. அங்கிருந்தவர்கள் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் ஈரோடு அரசு மருத்துவனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்திருப்பதை நான் தெரிந்து கொண்டேன். பேருந்தின் ஓட்டுநரை எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அரசு பேருந்தின் பதிவு எண் தற்போது மறந்து விட்டடது. என்னை பெருந்துறை காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** பெருந்துறையில் இரண்டு பேருந்து நிறுத்தம் உள்ளது நான் எந்த பேருந்து நிலையத்தில் நின்றிருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்த திசையில் நின்று கொண்டிருந்தேன் என்றால் தென் வடல் ரோட்டில் வடக்கே நின்று கொண்டிருந்தேன். விபத்து பேருந்து நிலையத்துக்கு முன்னால்

நடந்தது என்றால் சரியல்ல உள்ளே நடந்தது. நான் பார்க்கும் போது பஸ்ஸின் வலது கை பக்கம் தான் தெரியும் என்றால் சரிதான். பயணிகள் இடது கை பக்கம் வழியாக இறங்குவார்கள் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவம் இடம் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். ராம்பிரபு பெருந்துறை உதவி ஆய்வாளர் எனக்கு நன்கு பழக்கம் என்றால் சரிதான். என் மீது இதே நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான்.

2. நான் இதே நீதிமன்றத்தில் ராம்பிரபு போட்டுள்ள வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அடிபட்டவர் யார் என்று தெரியாது என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் பின் சக்கரம் ஏறியதாக சொல்லிவில்லை என்றால் சரிதான். அடிபட்டவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. விபத்தில் அடிபட்டவர் மது போதையில் இருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அ.சா.1 தான் பேருந்தில் இருந்து இறங்கும் போது சரிவர கவனிக்காமல் பேருந்து நிலையத்தில் இருந்த கம்பியில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது,. பஸ்ஸின் எந்த பகுதியும் அடிபட்டவர் மீது மோதவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தின் கையிருப்பு சாட்சி என்றும் போலீசார் சொன்னதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை